In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| Elec.O.P.No.36/2022 | Deposition of Witness: CW.1 |
| Name: Thangakkodi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 11.09.2024.

முதல் விசாரணை :

நான் தற்போது பழனி அய்யம்புளி கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றி வருகிறேன். பழனி வட்டாட்சியர் அவர்கள் 10.9.2024ம் தேதியன்று இவ்வழக்கில் ஆஜராக அனுமதிக்கடிதம் வழங்கி எனக்கும், உள்வட்ட வருவாய் ஆய்வர், ஆயக்குடி அவர்களுக்கும் அனுமதி கடிதம் வழங்கியுள்ளார். அந்த கடிதம் நீ.ம.சா.ஆ.1. மேலும் மேற்கு ஆயக்குடி கிராம நிர்வாக அலுவலருக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையையும் என்னிடம் வழங்கினார். ஏன் எனில் நான் ஏற்கனவே மேற்கு ஆயக்குடி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்ததால் என்னிடம் வழங்கி அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கக் கோரினார். நான் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 24.7.2023ம் தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வரவில்லை. வேலுச்சாமி என்பவர் உயிருடன் இருக்கிறார் என அவரது ஆவணங்களை பரிசீலித்து நான் சான்று வழங்கினேன். இறந்துபோன மற்றொரு வேலுச்சாமியின் இறப்புச்சான்றை தாக்கல் செய்கிறேன். இறந்துபோன வேலுச்சாமியின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். உயிருடன் இருக்கும் வேலுச்சாமியின் ஆதார் கார்டு, குடும்ப அட்டை, தேர்தல் அடையாள அட்டை நகல்களை தாக்கல் செய்கிறேன். மேற்படி வேலுச்சாமி உயிருடன் இல்லை என்றாலும், இறந்துபோன வேலுச்சாமி பெயரை வைத்துதான் மேற்படி ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. (சம்மந்தப்பட்ட வேலுசாமி நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி ஆவணங்களின் அசல் ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்தார்). அசல் ஆவணங்களுடன் மேற்படி நகல்கள் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு ஆதார் கார்டு நீமசாஆ.2, குடும்ப அட்டை நீ.ம.சாஆ.3, தேர்தல்அடையாள அட்டை நீமசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வேலுச்சாமி வந்து கேட்டுக்கொண்டதன் பேரில் சம்மந்தப்பட்ட முகவரியில் வேலுச்சாமி குடியிருந்து

வருகிறார் என்பதற்கு சான்று வழங்கினேன். வேலுச்சாமி கொடுத்த மனு நகல் நீமசாஆ.5. அதற்கு அந்த முகவரியில் அவர் வசித்து வருகிறார் என்பதற்கு நான் வழங்கிய சான்று நீமசாஆ.6. சின்னத்தம்பிக்கு இரண்டு மகன்கள் பெயர் வேலுசாமி என எதை சரிபார்த்து அறிக்கை வழங்கினேன் என்றால் அவர்களது ஆதார் கார்டு, ஓட்டர் ஐடி, குடும்ப அட்டை ஆகியவற்றை சரிபார்த்துத்தான் கொடுத்தேன்.

3 முதல் 10 எதிர்மனுதார்கள் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் உயிருடன் இருக்கும் வேலுச்சாமிக்குத்தான் நான் சான்று வழங்கினேன் என்றால் சரிதான்.

1 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை - வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2024.09.11 17:45:39 +0530

Principal District Judge,
Dindigul.